மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி நாம் வழக்கறிஞர் என்று சொல்லி வைக்கவில்லையே தவிர வழக்கறிஞர்களுக்கு உதவியாக இருக்கிற வக்கீல் குமாஸ்தாக்களுக்கு—' அட்வோகேட் அசிஸ்டன்ட்ஸ் '—தேவையான பயிற்சியை பள்ளிகளில் தொடங்கியிருக்கிறோம். அவர்கள் வழக்கறிஞர்களாக வரும்போது சிறந்த வழக்கறிஞர்களாக இருப்பார்கள்.

ஆயக்காரன்புலம் விவசாயக் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 550—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆயக்காரன்புலம் விவசாயக் கூட்டுறவு சங்கம் (தஞ்சாவூர் மாவட்டம்) பெரிதாக இருப்பதால் அதைப் பிரித்து பல கூட்டுறவு சங்கங்களாக மாற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆயக்காரன்புலம் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கத்தை இரண்டு சங்கங்களாகப் பிரித்து மருதூரில் ஒரு புதிய சங்கத்தை ஏற்படுத்த கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி அறிவுறுத்தப் பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆயக்காரன் புலம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளிடம் நிதி என்பதைக் காட்டி, வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்கிறார்கள். அதனால் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை ; வியாபாரிகளிடம் அந்த விவசாயிகள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். அந்தக் கொடுமையிலிருந்து அந்த விவசாயிகளைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஆயக்காரன்புலம் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மட்டுமல்ல, தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக இருக்கிற விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் நேரடியாக நெல்லை வாங்கும்போது உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைக்காமல் விவசாயிகள் உண்மையிலேயே பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு அறிகிறது அந்த அடிப்படையில்தான் முதல் முறையாக ஒரு நடவடிக்கையை இந்த அரசு தற்போது எடுத்து வருகிறது. கூட்டுறவுத் துறையின் மூலம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ' தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் '' மூலமாக விவசாயிகளிடம் நேரடியாக நெல்லை கொள்முதல் செய்ய அரசு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி கொள்

1981 மார்ச் 30]

முதல் செய்யும்போது மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையை விட அதிகமாக, கிட்டத்தட்ட 160 ரூபாயிலிருந்து 180 ரூபாய் வரையில் குவிண்டாலுக்கு கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள். மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ள லெவி பிரைஸ் குவிண்டாலுக்கு 105 ரூபாய்தான். தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் வியாபாரிகளைப் போலவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை கொள்முதல் செய்கிறது. இடையிலே இடைத் தரகர்களாக இருக்கிற வியாபாரிகளிடமிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும்; அதன் மூலம் நுகர்வோருக்கும் நியாய விலையில் அரிசி கிடைக்க வேண்டும் என்ற முறையிலே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 85,000 டன் அரிசி தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் மூலம் நேரடியாக, வியாபாரிகள் கொடுப்பதை விட சுமார் 50 ரூபாய் அதிகமாகக் கொடுத்து, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

திரு பொ. உத்திராபதி : தலைவரவர்களே, ஆயக்காரன் புலம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஒரு பிரிவு மருதூரில் தொடங்கப்பட இருப்பதாக அமைச்சவர்கள் சொன்னார்கள். அந்த மருதூரில் தொடங்கப்படக் கூடிய கூட்டுறவுச் சங்கம் எப்போது தொடங்கப்பட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, நெல் கொள்முதல் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்பொது நெல்லை வைத்திருப்பவர்கள் வசதி படைத்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே லெவி விலையில் மேலும் விவசாயிகளுக்கு அதிகவிலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கி. பொன்னையன் : தலைவரவர்களே, மருதூரிலே தனியாக ஒரு விவசாயக் கூட்டுறவு சேவை சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, ஜாயின்ட் ரெஜிஸ்திரார் ஆப் கோவாபரேட்டிவ் சொசைட்டீஸ் கும்பகோணம் அவர்கள் ஏற்கெனவே அதுபற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார். நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில் சிறு விவசாயிகள், பெரும் விவசாயிகள் என்று பார்க்காமல் விவசாய உற்பத்திச் செலவுக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கின்ற வகையில் வியாபாரிகள் கொடுக்கும் விலையைவிட கூடுதலாகக் கொடுத்து, விவசாயிகளிடமிருந்து நேரடியாக அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று முதல் முறையாக உத்தவிட்டிருக்கிறோம். அவர்கள் சிறு விவசாயிகள், பெரும் விவசாயிகள் என்று பார்க்காமல் வியாபாரிகள் கொடுப்பதை விட குவிண்டால் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 50 ரூபாய் கூடுதல் கொடுத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு நல்ல பயன் கிட்டி வருகிறது.